Faculty of Islamic Studies and Arabic Language
South Eastern University of Sri Lanka

# Second International Symposium - 2015

# PROCEEDINGS

Published By

Faculty of Islamic Studies and Arabic Language
South Eastern University of Sri Lanka
University Park
Oluvil
Sri Lanka

Faculty of Islamic Studies & Arabic Language
South Eastern University of Sri Lanka
University Park
Oluvil # 32360
Sri Lanka.

Phone: +94672255127
Fax: +94672255127
www.seu.ac.lk/fia

ISBN: 978 – 955 – 627 – 061 – 7

**Copyright:**
Faculty of Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University of Sri Lanka

**Disclaimer:**
*All rights reserved. No part of this proceedings may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without written permission from the authors, except for the inclusion of brief quotations in a review. The material in this publication has been supplied by the authors, and only minor copy editing, if relevant, has been done by the FIA, SEUSL. The views expressed remind the responsibility of the named authors and do not necessarily reflect those of the FIA, SEUSL.*

**Chief Editor:**
Mr. MSM. Jalaldeen

**Co – Editors:**
Mr. SMM. Mazahir
Mr. MHA. Munas
Dr. MIM. Jazeel
Mr. ABM. Aliyar

**Editorial Board:**
Mr. AM. Razick
Mr. MHM. Nairoos

**Compiled By:**
Mr. MIM. Irfan
Mr. SI. Nimsith
Mr. FHA. Shibly

**Cover Designed & Layout:**
Mr. SI. Nimsith & Mr. MIM. Irfan

04th March 2015

**Printed By:**
New Rich offset Printers, Akkaraippattu
0779900997

# ஒப்பாய்வு நோக்கில் இஸ்லாமிய – சைவசித்தாந்த இறைக்கொள்கை

**Mr. P.Chandrasegaram**
Department of Hindu Civilization, University of Jaffna, Sri Lanka
(chandrasegaram3@gmail.com)

***ஆய்வுச் சுருக்கம்***

*இன்றைய காலத்தில் மக்கள் பல்வேறுபட்ட இன, சமயச் சூழலில்வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால்கல்விசார் துறையில் சமயங்களுக்கிடையே நிகழ்த்தப்படுகின்ற ஒப்பாய்வுகள் மக்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பு இருந்து வருகின்றது. இலங்கையில் இஸ்லாமியசமயத்தையும், சித்தாந்த சைவத்தையும் பின்பற்றும் மக்கள் ஒருபிரதேசத்தில் வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளமையால் இச்சமயங்களுக்கிடையில் நிகழ்த்தப்படும் ஒப்பாய்வு முக்கியத்துவமுடையதாகின்றது. மத்திய கிழக்கில் தோன்றிய இஸ்லாம்,இறைவன் ஒருவனே என்ற கொள்கையோடு "அல்லாஹ்வி இற்கு யாரையும் இணை வைப்பதை அனுமதிக்காத அதேவேளை இறைவன் உருவமற்றவர் எனவும் தெரிவிக்கின்றது. தென்னிந்தியாவில் தோன்றிய சைவசித்தாந்தம், முழுந்த முடிபு என்ற கருத்துடன் மெய்ப்பொருட்கொள்கையை உருவாக்கி, இறைவன் ஒருவனே எனத் தெரிவிக்கின்றது. இங்கு இறைவனுக்கு உருவம் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு சில பிரதான விடயங்களில் ஒத்தும் வேறுபட்டும் செல்கின்ற இரு சமயங்களுக்கிடையிலான ஆராய்ச்சி மூலம் இரு சமயத்தவரிடையேயும் புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கம் ஏற்படும் என நம்பலாம்.*

*திறவுச் சொற்கள்: இஸ்லாம், சைவசித்தாந்தம், இறைவன், அல்லாஹ், திருக்குர்ஆன்*

**ஆய்வுப்பின்னணி**

சமகால சமயம் சார்ந்த கற்கைநெறித்துறையில் சமயங்கள் பற்றிய ஒப்பாய்வு (Comparative Religion) ஒரு பிரிவாகவே உள்ளது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினால் நாடுகளின் எல்லைகள் தகர்ந்து உலகம் ஒருமை நிலை நோக்கி நகர்கின்றது. மக்கள் முன்னர் போல் இல்லாமல் பல சமயச் சூழ்நிலையில் வாழ்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கல்விசார் துறையில் சமயங்களுக்கிடையே நிகழ்த்தப்படுகின்ற ஒப்பாய்வுகள் மக்களிடையே நல்லிணக்கத்தையும், சகிப்புத்தன்மையையும் புரிந்துணர்வையும் மேம்படுத்தும் என நம்பலாம். மத்திய கிழக்கில் பிறப்பிடமான யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலிய சமயங்கள் பற்றிய ஒப்பாய்வுகள் ஐரோப்பாவில் முக்கியம் பெற்றுள்ளன. கீழைத்தேயத்திலும், இந்தியாவில் தோன்றிய இந்து, பௌத்த, சீக்கிய சமயங்கள் பற்றிய ஒப்பாய்வுகள் இடம்பெறுகின்ற அதேவேளை கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களுக்கிடையிலும் ஒப்பாய்வுகள் இடம்பெறுகின்றன.

இஸ்லாமிய சமயம் மனிதனை மையப்பொருளாகக் கொண்டு, மனிதனுக்கு நேர்வழி காட்டும், ஒரு வாழ்வியல் ரீதியான அனைத்துலக சமயமாகும். கி.பி ஏழாம் நூற்றாண்டில் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறக்கி அருளப்பட்ட வேதமான அல்குர்ஆனின் போதனைகள் வழி, இறை தன்மைகள் வணக்கத்திற்குரியவையாகும் தகுதிக்கான தன்மைசார் சிறப்புக்கள் அனைத்தும் 'அல்லாஹ்' ஒருவனுக்கே உரியதாகும். இந்தப் பெயரைக் கொண்டு வேறு எவரையும் அழைக்கக்கூடாது. இத்தகைய பெயரைக்கொண்டு அழைக்க வேறு யாரும் தகுதியுடையவர்கள் அல்லர். எனவே 'அல்லாஹ்' இற்கு இணை வைப்பதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. உருவ வழிபாட்டையும் ஏற்றுக்கொள்வதில்லை.

இந்திய மெய்யியலில் தோன்றிய தென்னாட்டில் சிறப்புரிமையுடைய சைவசித்தாந்தம், தமிழர் வாழும் பிரதேசம் எங்கும் நிலைபெற்றுள்ளது. சமய தத்துவங்களின் முடிவுகளை எல்லாம் ஆராய்ந்து, அவற்றின் மேலான முடிவாக மெய்ப்பொருட் கொள்கையை உருவாக்கிய திறத்தினை, இந்நெறி சுட்டுகின்றது. சைவசித்தாந்தம் உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களில் உள்ளடக்கி ஆராய்கின்றது. இவற்றுள் பதி என்பது தலைவன், இறைவன், கடவுள் என்பதைக் குறிக்கும்.உயிர்கள் யாவற்றிற்கும் அவனே தலைவன். பசுவாகிய உயிர்கள் எல்லாம் அவனுக்கு அடிமைப்பொருட்கள் ஏனைய உலகப்பொருட்கள் அவனுக்கு உடைமைப்பொருட்கள் ஆகும். இறைவன் ஏகனாகவும், தேவர்களுக்கெல்லாம் தலைவனாகவும், பிறப்பு - இறப்பு இல்லாதவனாகவும், தாய், தந்தை, மனைவி இல்லாதவனாகவும் கூறப்படுகின்றான். இவ்வாறு சைவசித்தாந்தம் இறைவன் பற்றிக் கூறும்

# தீவக இஸ்லாமிய மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கைகள் - ஒரு பார்வை

**Miss. M. Sivakumar [1] and Dr. K. Arunthavarajah [2]**

[1]Department of History, University of Jaffna
[2]Department of History, University of Jaffna
(arunn.msu@gmail.com)

***ஆய்வுச் சுருக்கம்***

*உலகிலுள்ள அனைத்து சமூகங்களிலும் நம்பிக்கைகள் என்பது பொதுவானதொரு அம்சமாகவே உள்ளது. குறித்த ஒரு சமூகத்தினது சிறப்பான கட்டமைப்புக்கு அச்சமூகம் சார்ந்த நம்பிக்கைகளே ஆதாரமாகக் காணப்படுகின்றன. அந்தவகையில் ஒவ்வொரு சமூகத்தினதும் அதன் தன்மைக்கு ஏற்ப அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளில் மாற்றங்களைக் காணலாம். இஸ்லாமிய சமூகத்தவர் மத்தியில் இறைவன் ஒருவனே என்பதை மையமாகக் கொண்ட பொதுவான நம்பிக்கையே காணப்படுகின்றது. ஆனபோதும் இவை இடத்துக்கிடம் வேறுபாடுகள், தனித்துவங்கள் போன்ற அம்சங்களைத் தாங்கியதாக உள்ளன. இலங்கையின் வடபகுதியிலமைந்த யாழ்ப்பாணத்தில் அதிலும் குறிப்பாகத் தீவகத்தில் வாழ்கின்ற இஸ்லாமியர்கள் மத்தியில் நம்பிக்கைகளின் தாக்கம் அதிகமானதாகவே உள்ளது. இதனை வெளிப்படுத்தும் முகமாகவே தீவக இஸ்லாமியர் மத்தியில் நிலவும் நம்பிக்கைகள் பற்றிய இத்தகைய ஆய்வானது காணப்படுகின்றது. இவ்ஆய்விலே தீவக இஸ்லாமிய மக்கள் மத்தியில் நிலவும் பொதுவான நம்பிக்கைகள், தனித்துவமான நம்பிக்கைகள், இத்தகைய நம்பிக்கைகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என்பவை பற்றிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நம்பிக்கைகளின் அடிப்படையில் ஏனைய இலங்கையில் வாழ்ந்து வருகின்ற அதிலும் சில மைல்களே வேறுபாடுகள் கொண்ட யாழ்ப்பாண நகரத்து இஸ்லாமிய மக்களிலிருந்து தீவக இஸ்லாமிய மக்களை அவர்கள் கொண்டுள்ள பண்பாட்டினடிப்படையில் தனித்துவமாக இனங்காண முடியும்.*

*பிரதான சொற்பதங்கள் : தனித்துவமான அடையாளங்கள், இஸ்லாமிய மார்க்கம், இணக்க உறவு, மதநல்லிணக்கம், தீவக இஸ்லாமியர்*

அறிமுகம்

ஒருவிடயம் உள்ளது என்றோ அல்லது அது இருக்கின்றது என்றோ நிறுவப்படாமல் ஏற்றுக் கொள்ளப்படுதல் நம்பிக்கை எனப்படும் (எம்.எஸ்.அப்துல்ரஹீம்,1979). நம்பிக்கை என்பது ஒரு சமூகத்தை சார்ந்து கட்டியெழுப்பப்பட்டதன்று. நம்பிக்கைகளின் உருவாக்கத்தில் மதவிடயமே பிரதான இடத்தினை வகிக்கின்றதென்பதே உண்மை. ஒவ்வொரு சமூகத்திலும் நிலவும் சமயம் சார்ந்த நம்பிக்கைகளே அச்சமூகத்தின் நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன. இலங்கையில் வாழும் இந்துக்கள், இஸ்லாமியாகள், கிறிஸ்தவர்கள் என அனைத்து சமயத்தைச் சார்ந்தவர்களிடமும் அவரரவர் சமயத்திற்கேற்ப நம்பிக்கைகள் பரவலாகக் காணப்படுகின்றன.

அவ்வகையில் இலங்கையில் வாழும் இஸ்லாமிய சமூகத்தவர் மத்தியிலும் நம்பிக்கைகளின் செல்வாக்கு காணப்படவே செய்கின்றது. இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றுகின்ற ஒருவன் தன்னைப் படைத்த இறைவனை முழுமையாக ஏற்றுக்கொண்டு அவர் தம் திருத்தூதர்களையும் அவர்களுக்கு வழங்கிய வேதத்தையும் நம்பி ஏற்று முழுமையாகக் கட்டுப்படுத்தலே இஸ்லாமிய சமூகத்தவர் மத்தியில் நிலவும் பொதுவான நம்பிக்கைகளாகும். இத்தகைய நம்பிக்கை இலங்கையிலுள்ள அனைத்தும் இஸ்லாமியரிடமும் காணப்படும் பொதுவான அம்சமாகும்.

இத்தகைய பொதுவான நம்பிக்கைகள் தீவகத்தில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமிய மக்களிடமும் காணப்படுகின்ற அதேவேளை அதனைக் கடந்து சில தனித்துவமான நம்பிக்கைகளும் அவர்களுடன்கூடவே காணப்படுகின்றதெனலாம். ஏனைய இஸ்லாமிய மக்கள் மத்தியில் காணப்படும் நம்பிக்கைகள் பற்றிய எண்ணங்களைப் போலன்றி தீவக இஸ்லாமியர் மத்தியில் அதிக நம்பிக்கைகள் காணப்படுகின்றன. சகுனம் பார்த்தல், சோதிடம் பார்த்தல், கனவு பற்றிய நம்பிக்கை, வளையம் என்பன கட்டுதல், தாயத்துக்கட்டல், மந்திரித்தல், சூனியம் போன்றவற்றில் நம்பிக்கை, சாஸ்திரம் பார்த்தல் நேர்த்தி வைத்தல் என்பன இஸ்லாமிய மார்க்கப்படி தவறானசெயல் என்று கருதப்படுகின்ற போதும் தீவக இஸ்லாமிய மக்கள் மத்தியில் இத்தகைய நம்பிக்கைகள் பரவலாக உள்ளமை

குறிப்பிடத்தக்கது. தீவக இஸ்லாமிய மக்கள் மத்தியில் சியார வழிபாடுகளே அதிகமாக காணப்படுகின்றன (ஆய்வாளர்கள் நேரடி அவதானிப்பு). இங்குள்ள பள்ளிவாசல்களில் பெரும்பாலானவை சியாரம் கொண்டதாகவே அமைந்திருப்பதனால் சியார வழிபாட்டுடனான நம்பிக்கைகள் இப்பகுதிகளில் பரவலாக உள்ளன. திருமணம் முடித்தால் திருமணம் நிகழ்ந்த நாளுக்கு சியாரத்தை நாடவேண்டும். இல்லையேல் தெய்வக் குற்றம் ஆகிவிடும் என்ற நம்பிக்கை, தீர்க்கமுடியாத நோய்கள் ஏற்படுகின்ற போது சியாரத்துக்கு வந்து நேர்த்திவைக்கும் முறை, நோய்களைத் தீர்க்கும் பொருட்டுப் பள்ளிவாசல் மௌலவியினால் ஓதிதண்ணீர் வழங்கும் முறை, திருக்குர்ஆன் எழுத்துக்கள் பொறித்த புத்தகத் தகடுகளைத் தாயத்துக்களாக அணியும் வழக்கம், மேலும் மந்திரித்தல், சூனியம் செய்தல், வசியம் செய்தல் போன்ற பிரச்சினைகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டுப் பாதிக்கப்பட்டவரை அழைத்துவந்து குர்ஆன் ஓதிமந்திரிக்கும் முறை போன்றவற்றினை இங்கு காணலாம் (ஆய்வாளர்கள் நேரடி அவதானிப்பு).

இத்தகைய நம்பிக்கைகளில் பல இஸ்லாமிய மார்க்கத்தில் இல்லையாயினும் தீவகத்தில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமியர்கள் இவற்றினைக் கடைப்பிடிப்பதைக் காணலாம். இதற்கு இப்பகுதியில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமியர்களது பூர்வீகமும் இவர்கள் வாழ்ந்து வருகின்ற சூழற் காரணிகளுமே இத்தகையதொரு நிலைமைக்குப் பின்னணியாக அமைந்துள்ளன. தீவகத்தில் குடியேறியுள்ள இஸ்லாமிய மக்களின் பூர்வீகமானது தென்னிந்திய கீழைக் கடற்கரையினை அண்டிய பிரதேசங்களிலிருந்துவந்து குடியேறிய கேரள இஸ்லாமியர்களாக் காணப்படுகின்றது (க.அருந்தவராஜா,2012). இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள இஸ்லாமிய மக்களைப் போலன்றி தீவகத்திலுள்ள இஸ்லாமிய மக்கள் இங்குள்ள தமிழ்ச் சமூகத்துடன் நெருக்கமான சமூக உறவினை ஏற்படுத்தி வருகின்றமையின் பின்னணியில் அவர்களது நம்பிக்கைளின் தாக்கம் பல இவர்களிடமும் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையின் போது இஸ்லாமிய மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்த நேரத்தில் தீவுப் பகுதிகளிலிருந்த குறிப்பாக நயினாதீவிலிருந்த இஸ்லாமிய மக்கள் எவரும் இடம்பெயரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது (நேர்காணல்:என்.ஹனீபா,2013). இத்தகைய தமிழ் - இஸ்லாமிய மக்கள் மத்தியில் நிலவிய இறுக்கமான தொடர்புகளின் தாக்கத்தினை இவர்களது நம்பிக்கைகளிலும் கூடத் தெளிவாக அவதானிக்க முடிகிறது.

## ஆய்வுப்பிரதேச அறிமுகம்

இலங்கையின் வடமாகாணத்திலே யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடற்பரப்பில் பல தீவுகள் பரந்து கிடக்கின்றன. இத்தீவுகள் $79^{0}$ 49' – $80^{0}$ 40' வரையான கிழக்கு நெடுங்கோடுகளுக்கும் $9^{0}$ 36' - $9^{0}$–50' வரையான வட அகலக்கோடுகளுக்குமிடையில் அமைந்துள்ளன. குடாநாட்டின் மேற்குக்கரையிலிருந்து தென்மேற்காக 35 கிலோமீற்றர் வரையான தூரத்திற்குள் இத்தீவுக் கூட்டங்கள் உள்ளடங்குகின்றன. சப்ததீவுகள் உட்படப் பதினொரு பெரிய தீவுகளும் குடியிருப்புக்கள் இல்லாத சில சிறிய தீவுகளும் இங்கு காணப்படுகின்றன. இத் தீவுப்பகுதிகளில் இஸ்லாமியர் வாழ்கின்ற நயினாதீவு, வேலணைத்தீவு, நெடுந்தீவு போன்றன ஆய்வுப்பிரதேசங்களாக அமைகின்றன.

## ஆய்வினது நோக்கம்

தனித்துவமான அடையாளங்களைத் தாங்கி யாழ்ப்பாணம் உள்ளிட்ட தீவுப்பகுதிகள் சிலவற்றில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமிய மக்களிடம் காணப்படுகின்ற தனித்துவமான நம்பிக்கைகளினை வெளிப்படுத்துவது ஆய்வின் பிரதான நோக்கமாக உள்ளது. அதுமட்டுமன்றி இவர்களது தனித்துவமான நம்பிக்கைகளில் தாக்கம் செலுத்தும் பிற காரணிகளைப்பற்றி கண்டறிவதும் ஆய்வினது மற்றொரு இலக்காகும்.

## ஆய்வினது வரையறை

இஸ்லாமிய மக்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். யாழ்ப்பாணத்திலும் கூட இவர்கள் நகரப்பகுதி, சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை, தீவுப்பகுதிகள் போன்றவற்றில் பரவலாக வாழ்ந்து வந்தாலும் இந்த ஆய்வானது தீவுப்பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமியர்கள் பற்றியதாகவே அமைகின்றது. மேலும் கி.பி 8ஆம் நூற்றாண்டு தொடக்கம் தற்காலம் வரையான காலப்பிரிவினுள் இவ்ஆய்வு அடங்குகின்றது.

## கடந்தகால இலக்கிய மீளாய்வு

இவ்வாய்விற்கு முன்னோடி ஆய்வுகளெனக் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு எவையுமில்லை. இருப்பினும் பொதுவாக யாழ்ப்பாண இஸ்லாமியர்களது இறை நம்பிக்கை பற்றி எழுதப்பட்ட படைப்புக்கள் சில முன்னோடியாகக் கருதப்படக்கூடிய நிலையில் காணப்படுகின்றன. க.அருந்தவராஜா 2012இல் எழுதிய யாழ்ப்பாண முஸ்லிம்கள் என்ற நூலும் எம், எஸ், எம், அனஸ் என்பவர் 1997இல் எழுதிய இஸ்லாத்தின் தோற்றம் ஒரு சமூக பண்பாட்டியல் ஆய்வு என்ற நூலும்இ எம். எஸ், அப்துல்ரஹீம், 1979 இல் எழுதிய யாழ்ப்பாண முஸ்லிம் வரலாறும் பண்பாடும் என்ற நூலும்இ எல்.எம். அப்துல் அஸீஸ் 1907இல் எழுதிய இலங்கை சோனக இன வரலாறு என்ற படைப்பும் இலக்கிய மீளாய்விற்குள் உட்படுகின்றன.

## ஆய்வு முறையியல்

வரலாற்றுச் சமூக அணுகுமுறையின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்

பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இஸ்லாமியர்களது ஆரம்பகால வரலாறு பற்றிய செய்திகள் சிக்கலானதாகவே உள்ளது. இதேபோன்றதொரு தெளிவற்ற நிலையே தீவக இஸ்லாமியர் பற்றி ஆராய முற்படும்போதும் ஏற்படுகின்றது. அந்தவகையில் இவ்ஆய்வுக்கான தரவுகளில் முதல்தரமானவை நேரடியாக நேர்காணலின் மூலமாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடிப் பெறப்பட்டுள்ளன. ஒரு சில முதற்தரத்தரவுகளை அடிப்படையாகக்கொண்டு பிற்காலங்களில் எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் போன்றன இரண்டாந்தரச் சான்றுகளாக இவ்ஆய்விற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## முடிவுரை

நம்பிக்கைகள் என்பது அனைத்து சமூகங்கள் சார்ந்த பொதுவானதொரு அம்சமாகும். சமூகத்திற்கு சமூகம் வேறுபாடுகள் கொண்டவையாக இந்நம்பிக்கைகள் காணப்படுகின்றன. அவ்வகையில் இலங்கையில் இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களிடம் பொதுவான பல நம்பிக்கைகள் காணப்படவே செய்கின்றன. ஆனபோதும் நமது நாட்டிலும் இடத்துக்கிடம் இவர்களது நம்பிக்கைகளிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பதனையும் மறுக்கமுடியாது. தீவகத்திலே வாழுகின்ற இஸ்லாமிய மக்கள் மத்தியில் சில தனித்துவமான நம்பிக்கைகள் காணப்படவே செய்கின்றன. இவை ஏனைய பிரதேசத்தில் வாழும் இஸ்லாமிய மக்களது பண்பாட்டிலிருந்து இவர்களை வேறுபடுத்துகின்றது. இவர்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கைகளில் இவர்கள் கலந்து வாழும் சமுதாயத்தின் தாக்கத்தினை தெளிவாக இனம்காண முடிகின்றது. இவற்றில் பெரும்பாலான நம்பிக்கைகள் தமிழ் மக்களின் நம்பிக்கைகளை ஒத்திருப்பதை அவதானிக்கலாம். இந்நம்பிக்கைகளது செல்வாக்கு தனியே தீவக இஸ்லாமிய மக்கள் மத்தியில்தான் உள்ளது என்றும் கூறமுடியாது. ஏனைய பிரதேச இஸ்லாமியர் மத்தியிலும் இந்நம்பிக்கைகளின் தாக்கம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய நம்பிக்கைகள் இவர்களைத் தனித்துவமான வகையில் அடையாளப்படுத்துகின்றன. அண்மைக்காலங்களில் இவர்களது தனித்துவமான நம்பிக்கைகள் பல வெளியுலகத் தொடர்பின் பின்னணியில் பலமிழந்து வருவதனையும் அவதானிக்க முடிகின்றது.

## உசாத்துணைகள்

1) அனஸ்,எம்,எஸ்,எம்.,(1997), *இஸ்லாத்தில் தோற்றம் ஒரு சமூக பண்பாட்டியல் ஆய்வு,* பண்பாட்டு ஆய்வு வட்டம், பேராதனை.
2) அனஸ், எம், எஸ், எம்.,(2007), *இலங்கையில் முஸ்லீம் நுண்கலை,* குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3) அப்துல்ரஹீம், எம்,எஸ்.,(1979), *யாழ்ப்பாண முஸ்லீம் வரலாறும் பண்பாடும்,* நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.
4) அப்துல் அஸீஸ்,எல்,எம்.,(1907), *இலங்கை சோனக இன வரலாறு,* சோனக இஸ்லாமிய காலச்சார நிலையம், யாழ்ப்பாணம்.
5) அருந்தவராஜா, க.,(2012), யாழ்ப்பாண முஸ்லிம்கள், அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.